


**23.02.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **செயற்கை நுண்ணறிவு துறை வலுவான வளர்ச்சிகண்டு வருவதாக** பிரதமர் திரு.நரேந்திரமோடி மனதின்குரல் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

2. **தேசிய அறிவியல் தினத்தை ஆக்கப்பூர்வமாக கொண்டாட** பிரதமர் அழைப்புவிடுத்துள்ளார்.

3. **அரசு அலுவலர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வுகாண நான்கு** அமைச்சர்கள் குழுவை நியமித்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

4. **எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரம் மீனவர்கள்** 32 பேரை இலங்கை கடற்படையினர் இன்று அதிகாலை கைது செய்தனர்.

5. **ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா** இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖

**மன் கி பாத்**

**செயற்கை நுண்ணறிவு துறை வலுவான வளர்ச்சிக்கண்டு** வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 119-வது முறையாக இன்று உரையாற்றியஅவர், இத்துறையில் இந்தியாவின் முன்னேற்றம் குறித்து உலக நாடுகள் பாராட்டு தெரிவிப்பதாக கூறினார்.

விண்வெளி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் இளைஞர்களின் பங்களிப்பு தற்போது அதிகரித்து வருவதாக கூறிய பிரதமர், அண்மையில் இஸ்ரோவின் 100-வது ராக்கெட் ஏவப்பட்டது குறித்து பெருமிதம் தெரிவித்தார்.

செயற்கைகோள் செலுத்துவாகன உற்பத்தி, சந்திரயான், மங்கல்யான், ஆதித்யா எல்-1 உள்ளிட்ட விண்வெளி துறை சாதனைகள் புதிய உயரங்களை எட்டுவதற்கான உறுதியை வெளிப்படுத்துவதாக கூறினார்.

விண்வெளித்துறையில் மகளிர், தனியார், ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாக எடுத்துரைத்தார்.

வரும் 28-ம் தேதி, தேசிய அறிவியல் தினத்தை மனதின் குரல் நிகழ்ச்சி நேயர்கள் **“ஒரு விஞ்ஞானியாக ஒருநாள்”** என்ற கருப்பொருளின் அடிப்படையில் கொண்டாட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

ஆராய்ச்சி ஆய்வகம், கோளரங்கம், விண்வெளி மையத்தை பார்வையிடுதல் உள்ளிட்ட அறிவியல் ஆர்வத்தை தூண்டும் வகையிலான செயல்பாடுகளில் ஈடுபடவேண்டுமென்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

**சர்வதேச மகளிர் தினம் வரும் 8-ம் தேதி** கொண்டாடப்படும் நிலையில் மகளிருக்கு தலைவணங்குவதாக கூறிய பிரதமர், நாட்டை வலிமையானதாகவும், வளமானதாகவும் மாற்றுவதில் மகளிர் சக்தியின் பங்களிப்பு இன்றியமையாதது என்றார்.

சுதந்திர போராட்டம், அரசியலமைப்பு உருவாக்கம் உள்ளிட்டவற்றில் மகளிர் சக்தி பெரும்பங்கு வகிப்பதாக கூறிய அவர், பல்வேறு துறைகளில் வெற்றிபெற்ற மகளிர் சமூக ஊடகங்கள், நமோ செயலி மூலம், தங்களது வெற்றி பயணங்கள், அனுபவங்களை பகிர்ந்துகொள்ள வேண்டுமென பிரதமர் கேட்டுக்கொண்டார்.

**உத்ரகாண்டில் நடைபெற்ற தேசிய விளையாட்டு** போட்டிகளில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் தங்களது திறனை வெளிப்படுத்தியதாக குறிப்பிட்ட பிரதமர், தங்கப்பதக்கங்களை அதிகளவில் வென்ற சர்வீஸஸ் அணிக்கு வாழ்த்து தெரிவித்தார்.

**ஆரோக்கியமான முறையில் உடல் பருமன்** பிரச்சனையை சமாளிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த பிரதமர், உடல்பருமன் பிரச்சனை தற்போது குழந்தைகள் மற்றும் இளையோரிடையே அதிகரித்து வருவது குறித்து கவலை தெரிவித்த பிரதமர், உடல் பருமன் பல்வேறு வகையான நோய்களுக்கு இது வழிவகுப்பதாக கூறினார்

சமையல் எண்ணெய் பயன்பாட்டை 10 சதவிகிதம் குறைக்க வேண்டுமென்று அறிவுறுத்திய அவர், இதன்மூலம் இதயநோய், நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்களை கட்டுப்படுத்த முடியும் என்றார்.

**இந்திய கலாச்சாரம்** தாவரங்கள் மற்றும் விலங்குகளை வனங்குவதற்கு கற்பிப்பதாக கூறிய பிரதமர், தமிழ்நாட்டின் பூலி, கர்நாடகாவின் ஹுலிவேஷா, கேரளாவின் புலிகாளி ஆகிய கலாச்சார நடனங்கள் இயற்கை மற்றும் வனவிலங்குகளுடன் தொடர்புடையவை என்று குறிப்பிட்ட பிரதமர், வனவிலங்கு பாதுகாப்பில் பழங்குடியின மக்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது என்றார்.

கடந்த சில ஆண்டுகளில் புலிகள், சிறுத்தைகள், ஆசிய சிங்கங்கள் உள்ளிட்டவைகளின் எண்ணிக்கை தொடர்ந்த அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டினார்.

வனவிலங்கு பாதுகாப்புடன் தொடர்புடைய அனைவரையும் ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர், நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் இயற்கை மற்றும் வனவிலங்கு பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

இதுதொடர்பாக பல்வேறு ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளதற்கு பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

**பரிக்ஷா பே சர்ச்சா** நிகழ்ச்சியில் இந்த ஆண்டு பல்வேறு நிபுணர்களின் கருத்துக்களுடன் 8 அத்தியாயங்களாக நமோசெயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை

சுட்டிக்காட்டிய பிரதமர், மாணாக்கர் இதனை முறையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

**இதனிடையே பிரதமரின் இன்றைய மனதின் குரல்** உரை குறித்து திருச்சியை சேர்ந்த தொழில்முனைவோர் மற்றும் கல்லூரி பேராசிரியர் தங்கள் கருத்துக்களை எமது செய்திபிரிவிடம் எடுத்துரைக்கையில்

❖❖❖❖❖

**பிரதமர் - மத்தியபிரதேசம்**

**மத்தியபிரதேச மாநிலம் பாகேஸ்வர், தாம்,** மருத்துவ மற்றும் அறிவியில் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

போபாலில் இரண்டுநாள் உலக முதலீட்டாளர்கள் உச்சிமாநாட்டையும் பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

❖❖❖❖❖

**பிரதமர் - கிசான் சம்மான்**

**இதனிடையே கிசான் சம்மான், வேளாண்** நிதியுதவி திட்டத்தின் 19-வது தவணை தொகையை பிரதமர் நாளை விடுவிக்கிறார்.

பீஹார் மாநிலம் பகல்பூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் நாடுமுழுவதிலுமுள்ள 9 கோடியே 8 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்கில் 22 ஆயிரம் கோடி ரூபாய் நிதி விடுவிக்கப்படுகிறது.

❖❖❖❖❖

**உபேந்திர திவேதி**

**இந்தியா - ∴பிரான்ஸ் நாடுகளுக்கு இடையேயான** பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் ராணுவதளபதி ஜென்ரல் உபேந்திர திவேதி 4 நாள் அரசுமுறை பயணமாக இன்று ∴பிரான்ஸ் புறப்பட்டார்.

பாரீசில் அந்நாட்டு ராணுவத்தலைவர்களை நாளை சந்தித்து பேசும் அவர், இருநாடுகளுக்கு இடையேயான ராணுவ பயிற்சி, ∴பிரென்ஞ் ராணுவ நவீனமயமாக்கல் திட்டம் உள்ளிட்டவை குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

தொடர்ந்து அங்குள்ள ராணுவப்பள்ளி, தொழில்நுட்ப பிரிவின் போர் ஆய்வகம் உள்ளிட்டவற்றையும் பார்வையிடுகிறார்.

❖❖❖❖❖

**முதலமைச்சர் - குழு**

**தமிழகத்தில் அரசு அலுவலர்களின்** கோரிக்கைகளுக்கு விரைந்து தீர்வுகாண நான்கு அமைச்சர்கள் கொண்ட குழுவை நியமித்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர்கள் திரு. எ.வ.வேலு, திரு. தங்கம் தென்னரசு, திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருமதி. கயல்விழி செல்வராஜ் அடங்கிய இக்குழுவினர் சென்னை தலைமை செயலகத்தில் நாளை ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

அரசு ஊழியர் சங்கங்களின் கோரிக்கைகள் இதில் பரிசீலிக்கப்பட்டு உரிய தீர்வு காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖

**சேகர்பாபு**

**தமிழகத்தில் இந்த ஆண்டு 9 சிவாலயங்களில்** மஹா சிவராத்திரி விழா சிறப்பாக கொண்டாடப்பட உள்ளதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், திருவாணைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோவில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில், திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில் உள்ளிட்ட 9 கோவில்களில் மஹா சிவராத்திரி அன்று ஆன்மீக கலை, இசை, நடன நிகழ்ச்சிகளுடன், பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖

**கே.என்.நேரு**

**தமிழகத்தில் கர்ப்பிணி பெண்களின்** ஆரோக்கியத்தை உறுதி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.**K.N.**நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் பேசியஅவர், ஊட்டசத்து உணவின் அவசியத்தை வலியுறுத்தினார்.

❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**தமிழகத்தில் குறைந்த விலையில் தரமான** மருந்துகளை வழங்கும் ஆயிரம் முதல்வர் மருந்தகங்களை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நாளை திறந்து வைக்கிறார்.

இளையோரை தொழில்முனைவோர்களாக மேம்படுத்த வகைசெய்யும் இத்திட்டத்தின்கீழ் 3 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

இதன்மூலம் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் 75 சதவிகிதம் வரை குறைந்த விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்படவுள்ளன.

❖❖❖❖❖

**மீனவர்கள் கைது**

**எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக கூறி** ராமேஸ்வர மீனவர்கள் 32 பேரை இலங்கை கடற்படையினர் இன்று அதிகாலை கைது செய்தனர்.

கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த இம்மீனவர்களின் 5 விசை படகுகளையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

❖❖❖❖❖

**வரையாடுகள்**

நீலகிரி வால்பாறை, மூணாறு பகுதிகளில் வரையாடுகள் அழிவின் விளிம்பில் இருந்த நிலையில் இவற்றின் எண்ணிக்கை தற்போது 300-ஐ தாண்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

❖❖❖❖❖

**திருநெல்வேலி மாவட்டம் களக்காடு** வனக்கோட்டத்தில் புலிகள் கணக்கெடுப்பு பணி நடைபெறுவதை ஒட்டி களக்காடு தலையணைக்கு சுற்றுலா பயணிகள் வரும் 2-ம் தேதிவரை செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

**சிவகங்கை மாவட்டத்தில் ஆதரவற்ற** குழந்தைகளுக்கு பெரு நிறுவனங்கள் சமூக பங்களிப்பு நிதி வழங்க **QR Code** முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖

**நாமக்கல் வாய்ஸ்**

நாமக்கல்லில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு சிலம்ப பேரணி இன்று நடைபெற்றது இதுகுறித்து எமது செய்தியாளர்

❖❖❖❖❖

**இருவரி**

**தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் ஒருங்கிணைந்த** நீதிமன்ற கட்டிடம் அமைப்பதற்கான ஆய்வுப்பணிகள் இன்று நடைபெற்றன.

**திருச்சி மாவட்டத்தில் 157 புதிய வழித்தடங்களில்** மினிபேருந்து சேவைகளை தொடங்க தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

**கன்னியாகுமரி ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரையிலான** கடற்பகுதியில் இன்று பிற்பகல் முதல் நள்ளிரவு வரை கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என இந்திய கடல் தகவல் சேவை மையம் அறிவித்துள்ளது.

❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட்** போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖